REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 6உ வெள்ளி (22—10—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 7உ சனி (23—10—54) [இதழ் 112

பட்டம் தாணுவிற்குத் 'திருக்கரம்' காணிக்கை!

காணிக்கையாக்கியவர் சிகிச்சை பெறுகிறார்

நெய்யூர், அக். 22—

திரு—தமிழக விடுதலை தினமான ஆகஸ்ட் 11-ம் தேதியன்று புதுக்கடையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி, இங்குள்ள மிஷன் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த தோழர்கள் இருவர் குழித்துறை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஒரு கையைத் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலி கொடுத்த தோழர் வி. நாசப்பனுக்கு மருத்துவ மனையில் இன்னும் சிகிச்சை நடைபெறுகிறது.

போலீசாரின் கண்காணிப்புடன் சிகிச்சை பெற்று, இன்னும் ஆறாத புண்களுடன் கடாட்சம், பொன்னையன் என்ற இளைஞர்கள் குழித்துறைக்கு அழைத்துச் செல்லப்படுகையில் தோழர் கடாட்சத்தின் தாயார் மகனைக் கண்டதும் கண்ணீர் வடித்தாராம்!

நிற வேற்றுமைக்கு இரயிலில் ஏற்பாடு

வெள்ளையர் - கருப்பு நிறத்தவர்க்குத் தனித் தனிப் பெட்டிகள்!

இரு நிறத்தவரும் ஏறிச் செல்லும் 'பொதுப் பெட்டிகள்' ஒழிப்பு!

தென் ஆப்பிரிக்காவில் வெறிச் செயல்

தென் ஆப்பிரிக்கா சர்க்காரின் நிறவெறி உச்ச கட்டத்தை அடைகிறது. இதுவரை அங்குள்ள புகைவண்டியில், நிறபேதம் பாராமல் வெள்ளையர்களும் கருப்பு நிறத்தவர்களும் ஒன்று சேர்ந்து பிரயாணம் செய்வதற்கென 'பொது பெட்டிகள்' சேர்க்கப்பட்டு இருந்தன.

அடுத்த ஆண்டிலிருந்து அப்பெட்டிகளை ஒழித்துவிட்டு, வெள்ளையர்களுக்கு எனவும், கருப்பு நிறத்தவர்களுக்கு எனவும், வெவ்வேறான முதல் இரண்டாவது வகுப்புப் பெட்டிகள் சேர்க்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

கேப் நகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சென்று கொண்டு இருக்கும் புகை வண்டிகளில் இப்புது நிறவெறி ஏற்பாடு அடுத்த ஆண்டு துவக்கத்திலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

குறிப்பு:— இங்கும் அறுபது எழுபது ஆண்டுகளுக்குமுன் தங்களுக்கென தனி பெட்டிகள் புகைவண்டியில் இணைக்கப்பட வேண்டுமென சனாதனம் பார்ப்பனர்கள் கிளர்ச்சி செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சார் எஃகுத் - தொழிற்சாலைகள்

பிரெஞ்சுக்காரர் விலைக்கு வாங்குவர்!

சார் பகுதியில் உள்ள மிகப் பெரிய இரும்புத் தொழிற்சாலையான ரோச்சலிங் தொழிற்சாலையை பிரெஞ்சுக்காரர்கள் வாங்க முயற்சிப்பதாகத் தெரிகிறது.

இந்தத் தொழிற்சாலை விற்பனை செய்யப்பட்டால் ஜெர்மனியின் எஃகு உற்பத்தி வெளிநாட்டுக்காரர்களிடம் சென்றுவிடும் என்று கருதப்படுகிறது.

பிரெஞ்சுக்காரர்கள், 'சார்' நிலக்கரிச் சுரங்கங்களை 50 ஆண்டுகளுக்குக் குத்தகை பெற்றுள்ளனர். எஃக்குத் தொழிற்சாலைகளும் விற்பனை செய்யப்பட்டால், சார் பகுதியின் பொருளதாரம் ஜெர்மனியர் கையை விட்டுப் போகும் எனலாம்.

ஆப்பிரிக்காவில் வெள்ளையர் நடத்திய படுகொலைகள்!

6,741 பேர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்; 753 பேர் காயம்பட்டனர்

'மாவ் மாவ்' இயக்க ஒழிப்புப் போர்வையில் அட்டூழியம்!

முகனியாவில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசர நிலை இப்போதைக்கு அண்மையில் மாற்றப்பட மாட்டாதெனத் தெரிகிறது.

கடந்த இரண்டாண்டுகளில் 'மாவ் மாவ்' இயக்கத்தைச்சேர்ந்த சுமார் 6,741 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், 753 பேர்கள் படுகாயப்படுத்தப்பட்டு சிறைப் பிடிக்கப்பட்டதாகவும், காலனியில் உள்ள 'யுத்தக் குழு' அறிக்கை ஒன்று கூறுகிறது.

"மாவ் மாவ் இயக்கத்தினர் பலரிடையே அவர்கள் கையாண்டு வரும் பயங்கர முறைகளில் நம்பிக்கை குறைந்து வருகிறது; வேறு வழியில்லை என்று நினைக்கிற 'மாவ் மாவ்' இயக்கத்தின் தலைவர்கள் பலர் இன்னும் தொடர்ந்து வெள்ளையரை தீர்த்துப் போரிடவே விரும்புகிறார்கள்," என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

கதர் அபிவிருத்தி

ரூ. 24 லட்சம் இந்திய சர்க்கார் கடன் அளிக்கிறது

கதர் அபிவிருத்திக்கும், அதன் நிலையங்களின் முன்னேற்றத்திற்கும் உதவும் நோக்குடன் இந்திய சர்க்கார் அகில இந்திய கதர் கிராமக் கழகத்திற்கு ரூ. 24 லட்சம் கடன் கொடுத்துள்ளனர்.

2,25,000 தமிழர்களுக்குபுது ஆபத்து?

வருமானக் குறைவிற்காக குடி உரிமை மறுப்பு!

ஒப்பந்தத்திற்கு பின்னும் இலங்கை பிடிவாதம்

தோட்டத் தொழிலாளி ஒருவருக்குக் கிடைக்கும் வருமானம் அந்தத் தொழிலாளியின் குடும்பம் முழுவதையும் பாதுகாக்கப் போதுமானதல்ல என்ற காரணத்திற்காக இலங்கை குடி உரிமைப் பதிவு அதிகாரி எல். ஈ. தென்னகூன் என்பவர் அந்தத் தொழிலாளியின் குடி உரிமை மனுவை நிராகரித்துவிட்டார் என்று தெரிகிறது.

★

இலங்கையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு, கூலி நிர்ணய போர்டார், தொழிலாளியின் குடும்பத்தையும் கணக்கிட்டு நிர்ணயித்துள்ள கூலி விகிதமே பின்பற்றப்படுகிறது. இப்போது கிடைக்கும் வருமானம் போதாது என்று குடி உரிமை மறுக்கப்படுவது கண்டு பலரிடையே மனக் குழப்பம் ஏற்பட்டுள்ளதாம். இது போல் ஏராளமான மனுக்கள் நிராகரிக்கப்படும் என்று பலர் அஞ்சுகின்றனர்.

குடி உரிமைக்காக மனுச் செய்து கொண்டிருக்கும் 2,37,000 பேர்களில் 2,25,000 பேர் தோட்டத் தொழிலாளிகள் ஆவார்கள்.

மேலே கூறப்பட்டுள்ளபடி நிராகரித்த குடி உரிமை அதிகாரி, அண்மையில் புதுடில்லி சென்று வந்த இலங்கைத் தூதுக் குழுவில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குடி உரிமைக்காக மனுச் செய்துகொண்ட வைத்திபண்டாரம் என்ற தோட்டத் தொழிலாளியின் மனைவியும் வருமானம் உடையவர் என்று தெரிகிறது. இவர்களுக்கு ஆறு குழந்தைகள் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. இவரது குடி உரிமைபற்றிய செய்தி, விசாரணைக்குப் பின்னர் சர்க்கார் கெஜட்டில் அறிவிக்கப்பட்டதாம்.

ஆனால், சில நாட்களுக்குப் பின்னர், திரிசிங்கள பிரமுனு என்னும் இந்திய எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர் எனப்படும் எச். எதின்விரா என்பவர், 'வைத்திபண்டாரத்தின் வருமானம் அவரது குடும்பத்தைப் பாதுகாக்கப் போதாது,' என்றும் 'மனைவியின் வருவாயை மனுதாரின் வருமானத்துடன் சேர்க்கக் கூடாது,' என்றும் ஆட்சேபித்தார்.

இவரது ஆட்சேபனை பற்றி அவிசவில்லாவில் நடைபெற்ற

(4-ம் பக்கம் பார்க்க)

நேபாளத்தில் உழவர்கள் கிளர்ச்சி

போலீஸ் தடியடி பிரயோக தர்பார்

40 பேர்களுக்குக் காயம்—15 பேர் கைது

நேபாளத்தில் பைரவா மாவட்டத்தில் நடைபெறும் விவசாயிகளின் கிளர்ச்சி வெற்றிகரமாக நடைபெறுகிறது என்று கூறப்படுகிறது.

விவசாயிகளின் தலைவர்கள் மீதுள்ள வாரண்டுகளை ரத்து செய்ய வேண்டுமென்றும், விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும் கோரி, கடந்த பல வாரங்களாக அங்கே கிளர்ச்சி நடைபெறுகிறது.

இந்தக் கிளர்ச்சியை நேபாளப் பிரதமரின் கட்சியான தேசீய ஜனநாயகக் கட்சி நடத்துகிறது; கிளர்ச்சி மும்முரமாக இருப்பதாக கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவர் கூறினார்.

அக்டோபர் 15-ம் நாளன்று போலீசார் மிகப் பெரிய ஊர்வலம் ஒன்றின்மீது தடியடிப் பிரயோகம் செய்தனர். இதனால் 40 பேர் காயமுற்றனர் என்று தெரிகிறது.

கிளர்ச்சியினை நடத்தும் தேசீய ஜனநாயகக் கட்சியினைச் சேர்ந்த 15 உறுப்பினர்களைப் போலீசார் இதுவரை கைது செய்துள்ளனர் என்றும் தெரிகிறது.

இயற்கையோடு இயைந்து வளர்ந்தது இன்பத் தமிழ்

தமிழர் நாகரிகமே உலக முதல் நாகரிகமாகும்.

கொழும்பு முத்தமிழ் விழாவில் தோழர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவு

"தமிழ், இயற்கையோடு இயைந்து நின்று வளர்ந்து வந்த மொழியாகும் என்பதை நாம் தமிழ்ச் சொற்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்ப்பதன்மூலம் எளிதில் புரிந்துகொள்ளலாம்."

"தமிழர் நாகரிகம்தான் உலகில் தோன்றிய நாகரிகங்களில் மிகத் தொன்மை வாய்ந்ததும், முதன்மை வாய்ந்த

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை ஜனநாயகக் காங்கிரசார் கைது!

இலங்கையின் உயர் பிரதேச தோட்டங்கள் உள்ள நுவரேலியாவில், நான்கு நாட்களாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனராம்.

தொழிலாளர் தலைவர்களைப் பழி வாங்குவதை எதிர்த்து நடைபெறும் இந்த வேலை நிறுத்தத்தை ஒட்டி நடைபெற இருந்த தொழிலாளர் கூட்டமொன்றில் பேசப் போவதாக நுவரேலியா ஜனநாயகக் காங்கிரசைச் சேர்ந்த செல்லையா என்பவரும், மற்றும் மூவரும் அறிவித்திருந்தார்களாம்.

இவர்களைப் போலீசார் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது. மாஜிஸ்திரேட் முன்னிலையில் இவர்கள் கொண்டு செல்லப்பட்டபோது, இவர்களை இரண்டு வாரம் காவலில் வைக்க மாஜிஸ்திரேட் உத்திரவிட்டாராம்.

இவர்கள் கைது செய்யப்பட்டபோது இலங்கை ஜனநாயகக் காங்கிரசின் தலைவர் தொண்டமான் நுவரேலியாவில் இருந்தார் என்றும், அவர் உடன் சென்று தொழிலாளர் கூட்டத்தில் பேசினாரென்றும் அறிவிக்கப்படுகிறது.

போலீசார் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லையாம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 22—10—1954 வெள்ளி

உறவு நிலைத்தது!

எகிப்து நாட்டுக்குச் சொந்தமான சூயஸ்கால்வாய் பகுதியில், கடந்த எழுபது ஆண்டுகளாக பிரிட்டிஷ் இராணுவம் படை தளம் அமைத்துக் கொண்டு இருந்தது. அந்தப் படை தளத்தைக் காலி செய்து தன்னிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்பது எகிப்து அரசின் கோரிக்கை. சமீபகாலம் வரை அந்தக் கோரிக்கைக் கிணங்க மறுத்து, பிரிட்டிஷ் சர்க்கார் பிடிவாதம் பேசி வந்தது.

ஆகாய விமானப் போக்குவரத்து விரிவடைந்துள்ள இக் காலத்திலும் கூட, ஆசிய நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் நடைபெற்றுவரும் வியாபாரத்தில் சூயஸ் கால்வாயின் முக்கியத்துவம் குறைந்து விடவில்லை. என்றும்போல், சூயஸ் கால்வாய் கடல்வழி, பொருள் சிக்கனத்திற்கும், வியாபாரத்திற்கும், அரசியல் நிலைக்கும், இன்றும் சிறப்புடையதாகவே இருந்து வருகிறது.

ஆசிய நாடுகளுடன் செய்து வரும் வியாபாரத்தையே பெரிதும் நம்பி, வளந்தேட வேண்டிய கட்டாயத்தில் உள்ள பிரிட்டன், சூயஸ் கால்வாயைப் பாதுகாக்கும் பொறுப்பை தன்னிடமே இருக்கப் பார்த்துக் கொண்டதில் வியப்பொன்றுமில்லை. இந்தியா, பர்மா, மலாயா, இலங்கை ஆகிய ஆசிய நாடுகள் பிரிட்டனின் சுரண்டல் காடுகளாக இருந்ததினால், அரசியல் பொருளாதாரத் துறையில் அவைகளிடம் தனக்குள்ள தொடர்பை கட்டிக் காத்துவர வேண்டிய கட்டாயமும் பிரிட்டனுக்கு இருந்தது. அதுவுமன்றி, மேற்படி குடியேற்ற நாடுகளை, இராணுவத் துறையில் கண்காணித்துக் கொள்ளுவதும் பிரிட்டனுக்கு இன்றியமையாததாயிற்று. எனவே, சூயஸ் கால்வாய் பகுதியை முதல்தரமான படை தளமாக அமைத்து அதை நிர்வகித்து வரும் பொறுப்பை பிரிட்டன் மேற்கொண்டு இருந்தது.

மேற்கூறிய அரசியல் சூழ்நிலை இன்று இல்லை. அது புரட்சிகரமாக மாற்றம் பெற்றுவிட்டது. ஏற்கனவே இருந்ததுபோல், சூயஸ் கடல் வழியைக் கட்டிக் காக்க வேண்டிய அவசியம், பிரிட்டனுக்கு இப்பொழுது இல்லை.

இப்பொழுது பிரிட்டனுக்கு இன்றியமையாத தேவையாக உள்ளது அனைத்தும், எகிப்தினுடையவும், மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள அரபு நாடுகளினுடையவும் நல்லுறவே யாகும். அந்த நல்லுறவு, சூயஸ் பகுதியில் என்றும்போல் தம் படையை நிறுத்திவைப்பதால் பிரிட்டனுக்குக் கிடைப்பதாக இல்லை. நல்லுறவிற்குப் பதில், அப்பகுதியில் உள்ள முஸ்லீம் நாடுகளின் கொடும் பகையும் சந்தேகப் பார்வையும்தான் பிரிட்டனுக்குப் பரிசாகக் கிடைத்து வந்தன. அரபு நாடுகளின் வெறுப்பை ஏற்றுக் கொள்ள பிரிட்டனுக்குப் பிரியமில்லை.

சூயஸ் கால்வாயைக் கொண்டுள்ள எகிப்தின் விரோதத்தையும், அக்கால்வாயைச் சுற்றியுள்ள அரபு நாடுகளின் பகையையும் ஏற்றுக் கொள்வதா அல்லது சூயஸ் கால்வாயில் உள்ள தனது படை பலத்தை அகற்றிவிட்டு, அப்பகுதி முஸ்லிம் மக்களின் நல்லெண்ணத்திற்கு தன்னைப் பாத்திரமாக்கிக் கொள்வதா என்பதில் முடிவு காண்பதே பிரிட்டனுக்குப் பெருந்தொல்லையாக இருந்தது. குறிப்பிட்ட ஒரு பகுதியிலுள்ள மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்குப் பதில் அவர்களுடைய பகையை பெற்றுக் கொண்டு, அப்பகுதியில் பெரியதோர் படையை திரட்டி வைத்திருந்த போதிலும், அந்தப் பெரும் படையினிடமிருந்து, தான் எதிர்பார்க்கிற பாதுகாப்பு கிடைக்காது என்ற உண்மையை பிரிட்டன் நன்கு புரிந்து கொண்டது. எனவே, இறுதியாக, தனது படையை திரும்ப அழைத்துக் கொள்வது என்ற நல்ல முடிவிற்கு பிரிட்டன் வந்துவிட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

சூயஸ் கால்வாயை விட்டு தனது படையை வெளியேற்றி விட இதற்கு முன்பாகவே ஒப்பிவிட்டது. இருந்தாலும், இன்று ஏற்பட்டுள்ளதுபோல் ஒரு உடன்பாடு, எகிப்து நாட்டுக்கும் பிரிட்டனுக்கும் இதுவரை கையெழுத்தாகாமல் இருந்ததற்கே காரணம், மேற்படி படை தளத்தின் எதிர்கால உபயோகத்திலும், சீராக காத்துவருவதிலும், இருநாடுகளுக்குமிடையில் இருந்த கருத்து முரண்பாடேயாகும். இப்பொழுது, அந்த இரண்டு இனத்திலும் இரு நாடுகளுக்குமிடையில் ஒருமைப்பாடு ஏற்பட்டுவிட்டது. அதாவது, சூயஸ் கால்வாய் படை தளத்தை பிரிட்டிஷ் துருப்புகள் காலி செய்ததும் அதை சீராகக் கண்காணித்துவரும் பொறுப்பை, தனது மேற்பார்வையில் பிரிட்டிஷார் வைத்துக் கொள்வதற்கு எகிப்து சர்க்கார் உடன்பட்டு இருக்கிறது. அதற்கும் ஒரு நிபந்தனையை எகிப்து போட்டிருக்கிறது. இராணுவ உடையில் ஒரு வெள்ளையரும் அப்பொறுப்பில் இருக்கக்கூடாது என்பதே அந்நிபந்தனை. புதிய உடன்படிக்கைப்படி, எகிப்து சர்க்காரும், ஒரு பிரிட்டிஷ் கம்பெனியும் சூயஸ் படை தளத்தை சீர்கெடாமல் பார்த்துக் கொள்ளும்.

துருக்கியின் மீதோ—அல்லது அராபிய கூட்டில் சேர்ந்துள்ள எகிப்து உள்ளிட்ட மற்ற நாடுகள் மீதோ அன்னியர் படையெடுக்க நேர்ந்தால், மீண்டும் சூயஸ் படை தளத்தில் தனது படையைக் கொண்டுவந்து வைத்துக்கொள்ளும் உரிமையை, இந்த உடன்படிக்கையின் மூலம் பிரிட்டன் பெற்றிருக்கிறது. போர் முடிந்ததும் உடனடியாக சூயஸ் தளத்தை விட்டு பிரிட்டன் வெளியேறி விட வேண்டும் என்ற ஒரு நிபந்தனை, இதற்கும் உண்டு.

ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின்படி, சூயஸ் தளத்தில் இருந்துவரும் 80,000 பிரிட்டிஷ் துருப்புகள் 20 திங்களுக்குள்ளாக வெளியேறிவிடும். இந்த ஒப்பந்தம் ஏழு ஆண்டு காலம்வரை அமுலிலிருக்கும். இரண்டு அரசாங்கமும் விழைந்தால், அதை மேலும் புதுப்பித்துக் கொள்ளலாம்.

எகிப்தின் தேசீய கோரிக்கையும் நிறைவேறிவிட்டது. துருக்கிக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் என்ற பிரிட்டிஷ் மூலக் கொள்கையும், அரபு நாடுகளின் நல்லுறவைப் பெறும் நினைப்பும், இந்த உடன்படிக்கையால் வெற்றி பெற்று விட்டது.

எகிப்தின் சர்வாதிகாரியாக இன்று உள்ள அப்டல் நாசரின் கை, இந்த உடன்படிக்கையின் காரணமாக மேலும் வலுவடையும். மூலைக்கு ஒதுக்கித் தள்ளப்பட்ட நஜீப் இனி ஒரேயடியாக அரசியல் உலகை விட்டே வெளியேற்றப்பட்டாலும்படலாம்.

பெர்ஷியாவில் முசாதிக் விழ்த்தப்பட்டு மன்னரின் கை ஓங்கியதும், பிரிட்டிஷ்-எகிப்து பூசல் மாற்றம் பெற்றதும், மத்திய கிழக்குப் பகுதியின் அரசியல் மனப்பாங்கை குறிப்பிட்ட திசையில் கணிசமாக மாற்றி விடும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஒரு குடிசைத் தொழிலே!

மைசூர் சட்டசபையில் பேச்சு!

"மைசூர் மாநிலத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஒரு குடிசைத் தொழில்தான்,"

என்று, மைசூர் மேல் சபைத் தலைவர் கே. டி. பாஷ்யம் குறிப்பிட்டார்.

கேள்வி நேரத்தின்போது, ஒரு பி.-சோ. உறுப்பினர், "கள்ளச் சாராயம் காய்ச்சுவது, ஏறத்தாழ ஒரு குடிசைத் தொழிலாகவே மாறிவிட்டது," என்று குற்றம் சாட்டினர்.

சபைத் தலைவர், சிரிப்பொலிக் கிடையே "அது ஒரு குடிசைத் தொழில்தான்" என்று பதிலளித்தார்.

என்றாலும், மதுவிலக்கு மந்திரியோ, 'மாநிலத்தில் மதுவிலக்கு வெற்றி பெற்றிருப்பதாகவே தாம், திட்டக் குழுவிடம் அறிக்கை தந்திருப்பதாகவும், மதுவிலக்கினால், மக்களின் எண்ணத்தில் மாற்றமும், வாழ்வில் பொருளாதார முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உலகப் பொருளாதார கார்ப்பரேஷன்!

இந்தியா ஆதரிக்கிறது!

ஐ. நா. சபையின் பொருளாதாரக் குழுவில், இந்தியா, அபிவிருத்தி அடையாத நாடுகளின் முன்னேற்றத்திற்காக உதவ உலகப் பொருளாதாரக்கார்ப்பரேஷன் ஒன்றை அமைப்பதை வரவேற்று ஆதரித்துப் பேசியது.

250 மில்லியன் டாலர் மூலதனத்துடன் இயங்க இருக்கும் இந்தக் கார்ப்பரேஷன் குறைந்த வட்டிக்கு நீண்ட காலக் கடன் தொகையை அளிக்குமென்று தெரிகிறது.

இந்தியப் பிரதிநிதி பேசுகையில், அபிவிருத்தி அடையாத நாடுகள், தங்களின் திட்டங்களுக்கு உள்நாட்டையே நம்பியிருந்த போதிலும், வெளிநாட்டு மூலதனம் அவசியமென்றும், புதிதாக அமைக்கப்பட இருக்கும் கார்ப்பரேஷன் கடன் தருவதில், சர்க்காருடைய உத்தரவாதம் இன்றியே கடன் தரவேண்டுமென்றும், உலக பாங்கியைப் போன்று சம்மந்தப்பட்ட சர்க்காரின் உத்தரவாதங்களைக் கேட்பது கூடாது என்றும் கூறினர்.

பிரிட்டனின் சராசரி மனிதன்!

புத்தகம் தரும் புள்ளி விவரங்கள்

பிரிட்டிஷ் மக்களின் சராசரி வாழ்க்கைத்தரம பற்றிய புள்ளி விவரங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றை, பிரிட்டிஷ் அரசாங்கம் தயாரித்து வெளியிட்டுள்ளது.

300 பக்கங்கள் கொண்ட அப்புத்தகத்தில், பல ருசிகரமான விவரங்கள் அடங்கியுள்ளன.

1938-ல் இருந்ததைப் போன்றே 1954-லிலும் பிரிட்டனின் ஒரு சராசரி மனிதன், அதே அளவு சாராயம் குடிக்கிறுன்; அதே உஷ்ண நிலையில் வாழ்கிறுன்; 1938-லிருந்ததைக் காட்டிலும் அதிகமான பணம் சம்பாதிக்கிறுன்; அதிகமான குற்றங்களும் புரிகிறுன்.

முன்பைக்காட்டிலும் இப்போது குறைந்த ரயில் பிரயாணம் செய்கிறுன்; சொந்தத்தில் கார் வைத்துக்கொள்ள அதிகமாகப் பிரியப்படுகிறுன்; பல்கலைக்கழகம் சென்று படிக்கவும், மணந்துகொள்ளவும் அவாவுடையவனு யிருக்கிறுன்.

இங்கிலாந்தில் ஒரு சராசரி மனிதன், 1948-ல் வேலை செய்ததைக் காட்டிலும், 1953-ல் ஒரு வாரத்தில் ஒரு மணி நேரம் அதிகம் உழைக்கிறுன்; ஆனல் 1948-ல் 137 ஷில்லிங் 11 பென்ஸ் (ரூ. 92), 1953-ல் 169 ஷில்லிங் 2 பென்ஸ் (ரூ. 113) ஆக வார வருமானம் உயர்ந்துள்ளது.

1946 ஜூலையில், 6,35,000 வேலைகள் காலியிருந்தன; 1954 ஜூலையில் 3,83,000 வேலைகள் மட்டுமே காலியிருந்தன.

வாழ்க்கைச் செலவு பற்றிய புள்ளிவிவரங்களும், உணவு, உடை, குடியிருப்பு முதலிய வைகளையும் உள்ளடக்கி, வெளியிடப்பட்டுள்ளன:—

1914-ல் 100 ஆக வாழ்க்கைச் செலவு இருந்தால், 1938-ல் அது 156 ஆகவும், 1939-ல் 158; 1940-ல் 184; 1941-ல் 199; 1942-ல் 200; 1943-ல் 199; 1944-ல் 201; 1945-ல் 203; 1946-ல் 203·5; 1947-ல் 203-இப்படி உயர்ந்து கொண்டே சென்றது.

புள்ளி உயர்ந்து கொண்டே செல்வது கணக்கிடுவதற்குக் கஷ்டமாயிருக்கிறதெனக் கருதிய நிபுணர்கள், 1947 ஜூன் மாதத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை மீண்டும் 150 எனக் கொண்டு கணக்கிட ஆரம்பித்தனர்.

இப்போது, 1954 ஜூன் மாதத்தில் வாழ்க்கைச் செலவு புள்ளி 142 ஆக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

1953-ல் மொத்தம் நிகழ்ந்த 5,03,529 சாவுகளில், 4,83,665 சாவுகள் இயற்கையான காரணங்களாலும், 1,31,436 சாவுகள் இருதய நோயாலும், 68,069 சாவுகள் நரம்பு வியாதிகளாலும் ஏற்பட்டனவாம்.

எப்படி இருக்கிறுன் பார்த்தீர்களா, ஒரு 'சராசரி பிரிட்டிஷ்காரன்!'

9 ஆண்டுகளுக்குப் பின்னர் அணுகுண்டு வீச்சின் எதிரொலி!

மரணப் படுக்கையில் ஜப்பானிய மாணவன்

டோக்கியோ, அக். 18—

1945-ம் ஆண்டு ஆகஸ்டு 6-ம் நாளன்று ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டின் கதிர் இயக்கத்தினுல் ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் 18 வயதுள்ள அயே சீபா என்னும் ஜப்பானிய மாணவர் ஒருவர் நோயுற்றுள்ளார் என்று தெரிகிறது.

அனீமியா நோயினுல் பீடிக்கப்பட்டிருப்பதாக அந்த மாணவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும், பின்னர் டாக்டர்கள், அது கதிர் இயக்க நோய் என்று அறிந்தார்களாம். இம் மாணவரது எதிர்காலம், நம்பிக்கை அளிப்பதாக இல்லையாம்!

அணுகுண்டு வீசப்பட்டபோது அந்த மாணவர் தனது தாயுடனும், தங்கையுடனும் இருந்தார் என்றும், அவர்கள் இருவரும் குண்டு வீச்சினுல் மாண்டுபோயினர் என்றும் இந்த மாணவர் மட்டும் பிழைத்தார் என்றும் தெரிகிறது.

★

ஹிரோஷிமாவில், இன்று ஒரு பெண், அணுகுண்டு வீச்சினுல் ஏற்பட்ட கதிர் இயக்கத்தினுல் பாதிக்கப்பட்டு ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் மரணமடைந்த செய்தி கிடைத்திருக்கிறது.

68 வயதுள்ள அந்த ஜப்பானியப் பெண் சென்ற ஆண்டில் நோய்வாய்ப்பட்டார் என்று தெரிகிறது. அணுகுண்டு வீச்சினுல் பாதிக்கப்பட்ட நோயால் இறந்து போவோரில் இப்பெண் ஏழாவதாகும்.

ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டபோது இப்பெண் அந்த நகருக்கு இருபத்தைந்து மைல்களுக்கு அப்பால் இருந்ததாகவும், குண்டு வீசிய பின்னர் தனது உறவினர்களைப் பார்க்க அங்கே சென்றதாகவும் சொல்லப்படுகிறது.

தீண்டாமையை ஒழிக்க.....

இந்திய அரசாங்கம் சட்டம் இயற்றும்!

"தீண்டாமை, தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிற சட்டம் ஒன்றை சீக்கிரமே இந்திய அரசாங்கம் உருவாக்கும்; என்றாலும், தீண்டாமை ஒழிப்புச் சட்டம் வெற்றி பெறுவதற்கு மக்கள் தீவிரமாக உழைக்க வேண்டும்,"

என்று, இந்திய சர்க்காரின் உள்நாட்டிலாக்கா உதவி மந்திரி, பி. என். தாதர் ராஜ்கோட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"சமுதாயப் பொருளாதார அமைப்புகளை மாற்றியமைக்கும் பொருட்டு ஆடம்பரமாக நகரங்களில் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள், எளிய கிராமீய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்,"

என்றும், அவர் இங்கு காங்கிரஸ் ஊழியர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

'இனிப்புப் பண்டங்கள்' அபினக மாறின!

போபாலிலிருந்து பெங்களூருக்கு அனுப்பப்பட்ட 'இனிப்புப் பண்டங்கள்' என்று எழுதப்பட்டிருந்த பார்சல் ஒன்றை சென்னை ஜி. பி. ஓ.-வில் உடைத்துப் பார்த்தபோது சுமார் ரூ. 4000 பெறுமானமுள்ள 6 ராத்தல் 'அபின்' காணப்பட்டது.

ஜப்பானின் விசித்திர அரசியல்வாதிகள்!

300 பேர் கூடி கலகம் செய்தனர்!

ஜப்பான் ஆட்சிபீடத்திலிருக்கும் 'லிபரல் கட்சி'யையும், பிளவு பட்டுக்கிடக்கிற லிபரல் முற்போக்குக் கட்சிகளையும் ஒன்ருக இணைப்பது குறித்து, ஆராய்வதற்காக 300 அரசியல் வாதிகள் ஒன்று கூடினர்.

ஆனுல், அவர்களிடையே ஏற்பட்ட கருத்துவேற்றுமை, கலகமாகஉருவெடுத்திருக்கிறது.

ஆட்சிபீடத்திலிருக்கிற லிபரல் கட்சித் தலைவரான ஜப்பான் பிரதமர் யோஷிடாவின் ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டிருக்கிறது.

இணைப்புத் திட்டத்தை ஆராயும் பொருட்டு, யோஷிடாவின் எதிர்ப்பாளர்களில் ஐந்து பேர்களை ஒரு பிரதிநிதித்துவக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்க வேண்டுமென, கூட்டத்தின் தலைவர் யசாங்கா நெமிட்சு குறிப்பிட்டாராம்.

இதைக் கேட்டவுடன், கூடியிருந்த பலர் மேஜைமீது ஏறி அங்கும் இங்கும் ஓடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

சிலர் உறுமினர்; சிலர் சீறினர்; சிலர் வசவு பாட ஆரம்பித்தனர்; இன்னும் சிலர் மேடைமீதேறி வீண் சச்சரவுகளை வளர்த்தனர்.

எனவே, கூட்டத் தலைவர் கூட்டத்தைக் கலைத்தார்.

ஆனுல், பிரதமர் யோஷிடாவின் ஆதரவாளர்கள் கூட்டத்தை விட்டு வெளியேருது அங்கேயே இருந்து ஒரு புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்து, முன்னைய இணைப்புத் திட்டத்தை எதிர்த்து முடிவுகள் செய்தனர் எனத் தெரிகிறது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கஉதவி

இறுதிக் கட்டத்தை நெருங்குகிறது

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளிக்கும் இராணுவ, பொருளாதார உதவி பற்றிய இறுதி ஒப்பந்தம் ஏறக்குறைய முடிவடைந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

வாஷிங்டன் சென்றபோது முகமது அலி, ஒப்பந்தத்திற்கான இறுதி ஏற்பாடுகளைக் கவனித்தார் என்று தெரிகிறது.

இப்போதுள்ள ஏற்பாடுகளின் படி, இராணுவத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்காது பொருளாதாரத் துறைக்குத்தான் அமெரிக்க உதவி அதிக முக்கியத்துவம் அளிப்பதாக இருக்குமென்று கூறப்படுகிறது.

இந்தியாவைப் பற்றி அறிய சினிமாப் படம்

எம். ஜி. எம். தயாரிப்பர்

"பவானி ஜங்ஷன்" என்ற படமொன்றை பிரபல ஆங்கிலப் படத் தயாரிப்புக் கம்பெனியான எம். ஜி. எம். கம்பெனியார் எடுப்பார்களாம். அப்படம், அதே பெயரில் உள்ள புத்தகத்தைக் காட்டிலும் சிறப்பாக இருக்குமாம்.

அப்படம் இந்தியர்கள் எல்லோரையும் திகைக்க வைக்குமாம். வெளிநாட்டில் உள்ளவர்கள் உண்மையான இந்தியாவை நன்ருகப் புரிந்துகொள்ள உதவுவதாயும் இருக்குமாம்.

இத்தகவல்களை, அந்தக் கம்பெனியைச் சேர்ந்த ஏ. கோல்ட்ஸ்மித் என்பவர் அறிவித்ததாகத் தெரிகிறது.

பம்பாயில் புதிய தொழிலாளர் நகரம்!

20,000 பேர் குடியிருக்க வசதி

பம்பாய் தொழிலாளர்கள் 20,000 பேர்களுக்குக் குடியிருப்பு வசதிகளை அளிக்கும் புது நகரம் ஒன்று சென்ற பத்து மாதங்களில் அமைக்கப்பட்டுள்ளதாம்.

செம்பூர் என்னுமிடத்தில் 120 ஏகர் நிலங்களில் இப்போது கட்டப்பட்டுவிட்டன என்று தெரிகிறது. இந்த தொழிலாளர் நகருக்கு ஜனவரியில் பண்டித நேரு கல்நாட்டு விழா நடத்தினுர்.

இங்கே சராசரியாக மூன்று அறைகள் கொண்ட 3,200 வீடுகள் உள்ளனவாம். இம்மாத இறுதியில் 1,000 குடும்பங்கள் அங்கே குடியேறும் என்று தெரிகிறது.

இந்திய சர்க்காரின் உதவித் திட்டத்துடன், பம்பாய் சர்க்காரின் குடியிருப்பு அமைப்பு இலாகாவால் ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டது.

இத்தாலிய மக்கள் சபை உறுப்பினர்கள் குஸ்தி!

முஷ்டியால் இடித்தும், நாற்காலியால் அடித்தும் சண்டை பிடித்தனர்!

இத்தாலிய நாட்டு பிரதம மந்திரி மேரியோ ஸ்கெல்பாவின் வெளிநாட்டுக் கொள்கைகளை விவாதித்த பின் ஓட்டெடுக்கும் சமயத்தில் மக்கள் சபை உறுப்பினர்களிடையே அடிதடியும் கலகமும் தோன்ற ஆரம்பித்தன.

உறுப்பினர்கள் ஒருவரையொருவர் ஓங்கிக் குத்தியும், முஷ்டிகளால் இடித்தும், உடைந்த நாற்காலிகளால் அடித்தும், சண்டை பிடித்துக் கொண்டனர் எனத் தெரிகிறது.

போலீசார் வந்து நிலைமையைச் சீர்படுத்துகிற வரையில் சுமார் 10 நிமிடங்கள் இந்த குத்துச் சண்டை நடந்ததாம், மக்கள் சபையில்!

சமீபத்தில் லண்டனில் கூடிய ஒன்பது நாடுகள் மாநாடு, ஜெர்மனியை ஆயுதபாணியாக்கியிருப்பதை, நியாயமானது என ஏற்றுக்கொள்வதற் கொப்பானதும், தொடர்ந்து, இத்தாலிய வெளிநாட்டு மந்திரி மாறுநாள் பாரிஸ் நகரில் ஜெர்மனியை திரும்பவும் ஆயுதபாணியாக்குவது பற்றி யோசிக்க நடைபெறவிருக்கும் மாநாடுகளில் கலந்து கொள்வதற்கு அனுமதிப்பதுமான ஒரு தீர்மானம் ஒன்றின் மீது விவாதம் முடிந்து, ஓட்டெடுப்புக்காக அங்கத்தினர்களின் பெயர்கள் வாசிக்கப்படுகிற நேரத்தில்தான் இந்த அடிதடிக் கலகம் உருப்பெற்றிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்

மே. ஜெர்மனிக்கு ஓடினுர்

கிழக்கு ஜெர்மனியின் பாராளுமன்ற உறுப்பினரான லிபரல் ஜனநாயகக் கட்சியினரான ஹெர் ஹான்ஸ் முயிலர் என்பவர் தேர்தல் காலத் துவக்கமான இப்போது மேற்கு ஜெர்மனிக்கு ஓடிவிட்டார் என்று தெரிகிறது...

அவர் தனது கட்சியின் பொருளாதாரப் பிரிவுக்குத் தலைவராக இருந்தார்; இப்போது கிழக்கு ஜெர்மனியில் நடைபெறும் பொதுத் தேர்தல்களில் அவர் ஒரு அபேட்சகராக நிறுத்தப்படவில்லையாம்.

ஜெர்மன் பிரச்சினை

இத்தாலிய சர்க்கார் நம்பிக்கை வாக்கு பெற்றது

இத்தாலிய பாராளுமன்றம் ஜெர்மனியின் இராணுவப் புனரமைப்புப் பற்றி குறுகிய வாக்குகளால் இத்தாலிய சர்க்கார் நம்பிக்கை வாக்கு பெற்றுள்ளனர்.

அங்கீகரித்துவிட்டனர்

9 ஆண்டுகளாக மேற்கு ஜெர்மனி மீது நேசநாடுகள் கொண்டிருந்த ஆதிக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கும் புது உடன்படிக்கையினை மூவல்லரசுகளின் அயல் நாட்டு அமைச்சர்களும், மேற்கு ஜெர்மன் பிரதமரும் அங்கீகரித்து விட்டனர்.

சர்க்கார் இலாகாக்களில்....

கம்யூனிஸ்டுகள் '5-ம் படை' வேலை செய்கின்றனர்!

"அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம்"

ஐதராபாத் முதலமைச்சர் தகவல்!

ஐதராபாத் கல்வி இலாகாவில் கம்யூனிஸ்டுகளும், வகுப்பு வாதிகளும் புகுந்துகொண்டு, 'ஐந்தாம்படை'யினராக வேலை செய்கின்றனர்; சர்க்கார் இலாகாக்களில் அத்தகைய விரும்பத்தகாத நடத்தையுடையவர்கள் மீது சர்க்கார், கடுமையான நடவடிக்கை எடுத்தே தீரும்,"

என்று, ஐதராபாத் முதலமைச்சர் பி. ராமகிருஷ்ண ராவ், குல்பர்காவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னுர்:—

"சர்க்காருக்கு விரோதமான கொள்கையுடைய பலர் ஏராளமான அளவில் சர்க்கார் இலாகாக்களில் புகுந்துள்ளது என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது; கல்வி இலாகாவில் புகுந்த இந்த 'வியாதி' இதர இலாகாக்களுக்கும் பரவியுள்ளது போலும்!

"அரசியல் கட்சிகளில்கூட, பல விரும்பத்தகாதவர்கள் நுழைந்துவிட்டார்கள்.

"ஒரு கட்சியின் கொள்கைகளில் திடமான நம்பிக்கை இல்லாதவர்கள் கட்சியிலிருக்கவே கூடாது.

"காங்கிரசில், அத்தகைய கொள்கை நம்பிக்கையற்றவர்கள் இருந்தால் அவர்கள் வெளியேறி விடுவதே மேல்."

ஐதராபாத் மாளிகை

வாடகைக்கு விடப்படுகிறது!

புதுடில்லியிலுள்ள 'ஐதராபாத் ஹவுஸ்' என்னும் மாளிகை இப்போது மத்திய சர்க்காருக்கு வாடகைக்கு விடப்பட்டதாம். மூன்றுண்டுகளுக்கு வாடகைக்கு விடப்பட்ட இந்தக் கட்டிடம் சர்க்கார் விருந்தினர்களுக்கு பயன் படுத்தப்படுமாம்.

இந்தக் கட்டிடத்தின் மதிப்பு சுமார் 75 லட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்க - ஐரோப்பிய கூலிகள்

ஒன்ருக இருந்தால் பொருளாதாரம் நாசமடையுமாம்!

மத்திய ஆப்பிரிக்க கூட்டாட்சியினர், வடக்கு ரொடீஷியாவில் உள்ள செப்புத் சுரங்கத் தொழில் நிலைமை பற்றி சர்ஜான் பாஸ்டர் என்பவர் தலைமையில் செய்யப்பட்ட விசாரணை அறிக்கை இப்போது வெளியாகியிருக்கிறது.

"ஐரோப்பியத் தொழிலாளர்களுக்கு அளிப்பதுபோல் ஆப்பிரிக்கத் தொழிலாளர்களுக்கும் கூலி அல்லது சம்பளம் கொடுக்கப்பட்டால், தேசத்தின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்படும்," என்று அந்த அறிக்கை கூறுகிறது.

நாகரீகத்தின் முதற் படியில் இப்போதுதான் ஆப்பிரிக்கர்கள் அடி எடுத்து வைத்துள்ளார்கள் என்றும், தொழில் துறையில் அவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும், ஆனுல் அவர்களுக்கு ஐரோப்பியர்களைப்போல் பல துறைகளிலும் முன்னேற நல்ல வாய்ப்புக்கள் அளிக்கப்படவில்லை என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

கைத்தறி துணிகள்

விற்பனையை ஊக்குவிக்க முயற்சி

1953—54ல், கைத்தறித் தொழிலுக்காக 'செஸ்' நிதியிலிருந்து சென்னை மாநிலத்துக்கு சுமார் 92 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தத் தொகையில் இதுவரை 25 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளனவாம். மேலும் 33 லட்ச ரூபாய், துணிகளை வாங்கி டெப்போக்களுக்கு விநியோகிக்க கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூலதனமாக அளிக்கப்படலாம் என்றும் தெரிகிறது.

1954—55ம் ஆண்டுக்கு, 'செஸ்' நிதியிலிருந்து சென்னை மாநிலத்துக்கு ரூ. 65 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அத்தொகை செலவழிக்கப்படும் திட்டங்களுக்கு இனிமேல்தான் அனுமதி கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

திரு-கொச்சி தமிழர் எதிர்காலம் பற்றி பண்டிதருக்குக் கோரிக்கை

காமராஜர் அனுப்பி இருப்பதாக கோசல்ராம் தகவல்

திரு—தமிழகப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணவேண்டுமென்க் கோரி, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரான திரு எல். எஸ். கரையாளரும், முதன் மந்திரி காமராசரும் இந்தியப் பிரதமர் பண்டித நேருவுக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

மேலும் தாய்த்தமிழக மக்கள் சபை உறுப்பினர்களும், பண்டிதரிடம், திரு—தமிழக நிலைகளை விளக்கிக் கூறிப் பரிகாரம் கோரியுள்ளதாகவும், தோழர் கெ. டி. கோசல்ராம், ஒரு நிருபரிடம் கூறியதாகத் தெரிகிறது.

"திரு—தமிழகத்தில் நடைபெற்ற போலீஸ் அட்டூழியங்களை விசாரிக்க, திரு — கொச்சிக்கு வெளியில் உள்ள தமிழரோ, மலையாளியோ அல்லாத ஒருவரை விசாரணைக் குழுவில் நியமிப்பதாக, திரு. பட்டம் தாணு பிள்ளை கூறியிருந்தார்; ஆனுல், நியமனம் அதற்கு நேர்மாருக இருக்கிறது," என்றும் அவர் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

திரு-தமிழர் தலைவர்கள்

ஜாமீன் விடுதலை மனு

தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

திருவனந்தபுரம், அக். 21—

திரு—கொ. உயர்நீதி மன்ற நீதிபதி கே. எஸ். கோவிந்த பிள்ளை முன்னிலையில், திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட 65 பேர்களின் ஜாமீன் விடுதலை மனு தாக்கல் செய்யப்பட்டது. அம்மனுக்கள் பேரில், தீர்ப்புக் கூறுவது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு - கொச்சி பி.-சோ. ஆட்சிக்கு....

புரட்சி சோஷலிஸ்ட் ஆதரவு இல்லை

"திரு—கொச்சியில் உள்ள புரட்சிகர சோஷலிஸ்டு கட்சிக்கு. ஆட்சி பீடத்திலிருக்கும் பி.-சோ கட்சியுடன் கூட்டுச் சேருகிற எண்ணமே இல்லை," என்று அக்கட்சித் தலைவரான என். ஸ்ரீ கண்டன் நாயர், எம். பி., கூறினுர்.

முற்போக்கு எண்ணங்கொண்ட ஏதேனும் ஒரு கட்சியுடன் கூட்டுச் சேர்வது சரிதான் என தாம் எண்ணியபோதும், இப்போது திரு—கொச்சியில் ஆட்சியிலிருக்கும் பி. சோ. கட்சிக்கு, தாம் ஆதரவு தரப்போவதில்லை என்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது.

திராவிடத்தின் வளம்!

அம்பாசமுத்திரத்தில் நிலக்கரி கிடைக்கிறது

அம்பாசமுத்திரத்திற்கு அருகில் உள்ள பொட்டல் கிராமத்தில் பகவதி பெருமாள் என்பவர் தனது புஞ்சை நிலத்தில் கிணறு தோண்டும்போது இரண்டு அடிக்குக் கீழே நீர் ஊற்று இருப்பதும், அங்கு நிலக்கரி, மற்றும் இதர வகை மணலும் கிடைப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கே கிடைப்பது நிலக்கரிதான் என்பதை பாபநாசத்தில் உள்ள ஹார்வி மில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

செய்தி கிடைத்ததும், ரெவினியூ இன்ஸ்பெக்டர் அந்த இடத்திற்குச் சென்று, நிலக்கரி துண்டுகளை நிபுணர்களின் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிகிறது.

மூக்குக்கண்ணுடி தொழிற்சாலை

கல்கத்தாவில் தோன்றுகிறது

இந்தியாவிலேயே முதல் மூக்குக் கண்ணுடி தொழிற்சாலையாக ஒன்று, கல்கத்தாவிலுள்ள மத்திய கண்ணுடி, மண்பாண்டத் தொழில் ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் நிறைவேற இந்திய சர்க்காரின் அங்கீகாரத்துக்காகத் தொழில் விஞ்ஞான ஆராய்ச்சிக் குழு காத்துக்கொண்டிருக்கிறதாம்!

5,000 ஆண்டுகளுக்கு முந்திய எலும்புக் கூடுகள்!

வடக்கு சாரவாக்கில் உள்ள நியாஹ் குகைகளில் 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் பிராணிகளுடைய 200 எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

இதைக் கண்டுபிடித்த புதைபொருள் இலாகா குழுவினர் இந்த எலும்புகளுடன் மான் முதல்—நாண்டா மிருகம் வரையுள்ள பல மிருகங்களின் எலும்புக் கூடுகளையும் கண்டுபிடித்துள்ளனர் என்று தெரிகிறது. அத்துடன் பலவித பாத்திரங்களும் காணப்படுகின்றனவாம்!

முத்தமிழ் விழாவில் நெடுஞ்செழியன்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தும் ஆகும் என்பதை உலக வரலாற்று அறிஞர்கள் தக்க ஆதாரங்களோடு தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார்கள்."

"கடல் கொண்ட குமரி நாட்டில் வளர்ந்த நாகரிகம் தென்னுடு புகுந்து, பின்னர் மொஹெஞ்சதாரோ—ஹாரப்பா நாகரிகமாக மாறி, அதுவே பிறகு யூப்ரிடிஸ்—டைகிரீஸ் நதிகளுக்கிடையே வளர்ந்த சுமேரியா நாகரிகமாகத் திகழ்ந்து, பின் அரேபியா சென்று, பின், சிரியா, பாபிலோனியா நாடுகளுக்குச் சென்று, பின் எகிப்துக்கு எட்டி, பின்னர் கிரேக்க நாட்டிற்குத் தாவி, பின் இத்தாலி நாட்டில் இறங்கி, பின் ஸ்பெயின் நாடு சென்று, அதன்பின் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கும் சென்றதாக ஹீராஸ் பாதிரியார் மிக்க அழகோடும், ஆராய்ச்சியோடும் எடுத்துக் கூறியுள்ளார்; காலத்தைக் கணக்கிடுவது, நாட்களுக்குப் பெயரிடுவது, எண்ணின் அளவை நிலைப்படுத்துவது போன்ற கருத்துக்கள் திராவிடத்திலிருந்துதான் அகில உலகம் எங்கும் பரவியதாக அவர் கூறியுள்ளார்."

"தமிழர்கள் கலையியலில், மொழியியலில், அறிவியலில், வாணிக இயலில், அரசியலில் உலக நாடுகள் எல்லாவற்றைக் காட்டிலும் மிகச் சிறந்து விளங்குகிருர்; ஆனல், அவர்களது வளர்ச்சி கி. பி. இரண்டாவது நூற்ருண்டோடு வந்து தேங்கி நின்றுவிட்டது. சமயப் பூசல்கள், அரசியல் படையெடுப்புகள், மொழிப் படையெடுப்புகள் ஆகியவை தமிழர்களின் வளர்ச்சியை மேலும் மேலும் முன்னேறவொட்டாமல் தடுத்துவிட்டன. பண்டைத் தமிழர்களின் நாகரிகம் தொடர்ந்து வளர்ந்து வந்திருக்குமேயானல், எவ்வளவு முன்னேறி வந்திருக்குமோ அவ்வளவு முன்னேற்றத்திற்குக் கொண்டு வரவேண்டியது இக்காலத் தமிழர்களின் இன்றியமையாக் கடமையாகும்."

—இவ்வாறு, கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் 12-வது ஆண்டு விழாவின் ஆரம்ப நாள் கூட்டத்தில், "முத்தமிழ்" என்றும் பொருள் பற்றி விளக்கவுரையாற்றுகையில், தோழர் இரா. **நெடுஞ்செழியன்** *அவர்கள் குறிப்பிட்டார்.*

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டு விழாவின் ஆரம்ப நாள் கூட்டம் 15—10—54 மாலை 5-25 மணிக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் மிகச் சிறப்பாகத் தொடங்கிற்று. மாலை சுமார் 3 மணியிலிருந்தே கொழும்பின் பல பகுதிகளிலும் உள்ள தமிழன்பர்களும், கழகத் தோழர்களும் மண்டபத்தில் கூடத் தொடங்கிவிட்டார்கள். மண்டபம் சுமார் ஆயிரம் பேர்களை மட்டுமே கொள்ளக்கூடிய சிறிய அளவில் அமைந்திருந்ததால், ஆயிரக்கணக்கான மக்கள் மண்டபத்தைச் சுற்றிலும் வெளியே நிற்க வேண்டி ஏற்பட்டுவிட்டது; மேடை மிக அமைப்பாக அழகுபடுத்தப்பட்டிருந்தது.

முதலில், தோழர் செல்வி பராசக்தி விநாயகமூர்த்தியும், அவர்களது மாணவிகளும் இன்னிசையரங்கு ஒன்று இனிமையாக நடத்தினர்கள்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் வித்துவான் வ. மு. கனக சுந்தரம் அவர்கள் தமிழ்ச் சங்கத்தின் சீரிய பணிகளைச் செவ்விதான முறையில் எடுத்துக் கூறி, விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றுச் சிறிய உரை ஒன்று ஆற்றினர்.

பின்னர் இலங்கை பாதுகாப்பு, வெளிநாட்டுவிவகார உதவி அமைச்சர் தோழர் வ. நல்லையா பி.ஏ., அவர்கள், விழாவைத் தொடக்கி வைத்தார்கள்.

விழாவிற்கு நவாலியூர் 'தோழர் சோ. நடராசன் அவர்கள் தலைமை தாங்கினர்.

அவர், தம்முடைய தலைமையுரையில் குறிப்பிட்டதின் சுருக்கமாவது:—

"தமிழ்ப் பண்பாடானது, பல முகப்பட்டு ஒளிவிடும் வைரக்கல் போன்றது; அது, எந்தப் பக்கம் திருப்பிப் பார்த்தாலும் அந்தப்பக்கத்திலிருந்து ஒளி வீசிக்கொண்டேயிருக்கும்; தமிழகத்தில் பல நூற்ருண்டாக வாழ்ந்து வந்த அடிப்பட்ட சான்றேரின் அனுபவமே தமிழ்ப் பண்பாடாகும்; உண்மையான நாகரீகமும், பண்பாடும், உயர்ந்த சிந்தையும், சிறந்த எண்ணமும் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையுமுடையதாக இருக்க வேண்டும்; உறுதியான இலட்சியமுடையதாக இருக்கவேண்டும்; தனக்கும், சமூகத்துக்கும், உலகுக்குமே நன்மை தரக்கூடியதாக இருக்கவேண்டும்: நாம், எம் பண்பாட்டை இந்நாட்டிலும், ஏனையநாடுகளிலும் பரப்புவதனல், பண்டு நாம் எவ்வாறு கருத்தால் உலகை ஆட்சிசெய்து அறிவையும், அன்பையும் சகோதரத்துவத்தையும் பரப்பினேமோ, அவ்வாறு இன்றும் பரப்பி, எம்மினத்துக்கும் மற்றையோர்க்கும் நன்மை செய்து வாழ்வோமாக," என்ருர்

அடுத்து, கவிமணி தேசிக விநாயகம் முத்துசிவம் ஆகியோர் மறைவு குறித்து, இரங்கல் தீர்மானம் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மட்டக்களப்பு அருணசல தேசிகர் அவர்கள் 'மூலாதார இலக்கியங்கள்' என்னும் தலைப்பில், நீதி நூல்களின் அருமை பெருமைகளைப் பற்றியெல்லாம் விளக்கி, மக்கள், நீதிக் கருத்துக்களைக் கடைப் பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினர்.

பின்னர் பெரிய ஆரவாரம் கைத்தட்டல் களுக்கிடையே தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'முத்தமிழ்' என்னும் பொருள் பற்றி நீண்டதோர் விளக்கவுரையாற்றினர்.

அவரது தொண்டை, அன்று மிகவும் கட்டி இருந்ததால், மிகத் தொல்லைப்பட்டு, வேதனையோடு சொற்பொழிவாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அவர் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

"எழில் மிகுந்த இலங்கையில் வாழும் இன்பத் தமிழர்களை முதன் முறையாகக் காணும் வாய்ப்பு இன்று ஏற்பட்டதற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன், இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த கொழும்பு தமிழ்ச் சங்கத்தாருக்கு என் நன்றி உரித்தாகுக"

"எழில் மிகுந்த இலங்கையைக் காண்கிறேன்; அதனகத்தே சாலைகளையும் சோலைகளையும், தெங்கின் தோப்புகளையும், கமுகின் தோட்டங்களையும், நீர்வளத்தையும் நிலவளத்தையும், பள்ளத் தாக்குகளையும் குன்றின் அடுக்கங்களையும், மலை வளத்தையும், கடல் வளத்தையும், விளைவைப் பெருக்கும் வயல்களையும், கதிர்களை விளைவிக்கும் கழனிகளையும் காண்கிறேன்: அவற்றிற்கிடையே உங்களைக் காண்கிறேன்; உங்கள் உள்ளத்திலே தமிழ் ஆர்வத்தைக் காண்கிறேன்; அதன் ஒளியை உங்கள் கண்களிலும், முகத்திலும் காண்கிறேன்; பெருமகிழ்ச்சி கொள்கிறேன்!

"நீங்கள் வாழும் இலங்கை, உலக அமைப்பில் முக்கியமானதொரு இடத்திலே அமைந்திருக்கிறது. ஐரோப்பாக் கண்டத்தினின்றும் விலகி, ஒரு தனித் தீவாகக் காட்சியளிக்கும் கிரேட் பிரிட்டன், எப்படி அட்லாண்டிக் மாகடலில் ஆதிக்கம் செலுத்தி, அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் நின்று அவைகளுக்கிடையே நட்புறவை வளர்க்கும் வகையில் அகில உலக அரங்கில் பணியாற்றிவருகிறதோ, அப்படியே இந்தியத் துணைக்கண்டத்தினின்றும் விலகி ஒரு தனித் தீவாகக் காட்சியளிக்கும் இலங்கையும், இந்துமாக்கடலில் ஆட்சி செலுத்தும் நிலையைப் பெறுவதோடு, கிழக்கு மேற்கு நாடுகளுக்கிடையே நட்புறவு ஏற்படுத்தும் முக்கியத்துவத்தையும் பெற்றிருக்கிறது.

"இலங்கையைச் சூழ்ந்து பரவிக் கிடக்கும் கடல், அது தனித்தியங்குவதற்கான தன்மையை அதனுக்கு அளித்திருக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளுக்கிடையே வாழும் இலங்கை மக்களாகிய நீங்கள் வளத்தைக் கூட்டவும், வாணிகத்தைப் பெருக்கவும், தொழிற்சாலைகளை உண்டாக்கவும், உற்பத்தியை வளர்க்கவும், பண்பாட்டைப் பரப்பவும், மொழியைப் பேணவும் ஆன வாய்ப்பையும் வசதியையும் பெற்றிருக்கிறீர்கள். நமது தாய்மொழியாம் தமிழை, எல்லாத் துறைகளிலும் வளர்ப்பதற்கான முறையில் அந்த வாய்ப்பையும் வசதியையும் நீங்கள் பயன்படுத்துவீர்கள் என்று கருதுகிறேன்.

"தமிழ் இயற்கையோடு இயைந்து வளர்ந்து வந்த இன்ப மொழியாகும். இயற்கையின் பண்புகளை நன்கு ஆராய்ந்தறிந்த காரணத்தால்தான், பண்டைத் தமிழ்ச் சான்றேர்கள், தமிழை, "முத்தமிழ்" என்று அழைத்து வரலானர்கள். தமிழைத் தவிர வேறு எந்த மொழியும் "மூன்று" என்னும் அடைமொழி பெற்று வழங்குவதில்லை. தமிழ் ஒன்றுதான் "முத்தமிழ்" என்று அழைக்கப்படுகிறது.

"முத்தமிழ் என்ருல், இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றையும் உடைய தமிழ்—ஆகிய மூன்றிற்கும் அடிப்படையாக அமைந்த தமிழ்—ஆகிய மூன்றினுலாகிய தமிழ் என்று பலவாறு கூறுவார்கள். தமிழ் மொழி இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றின் தன்மையைக்கொண்டிருக்கும் அக்காரணம் பற்றி "முத்தமிழ்" என்று முறைபடக் கூறினர்கள் — பண்டைத் தமிழ்ச் சான்றேர் என்று கூறலாம்.

'வா' என்ற இயற்சொல்லை, வேலைக்காரனைக் கூப்பிட ஒருவித இசையாலும், குழந்தையைக் கூப்பிட வேருேர் இசையாலும் பொதுவான ஒருவரை அழைக்கும்போது மற்றுமோர்வித இசையாலும் ஒலிக்கிறேம், ஒவ்வொரு சொல்லிலும், இயலோடு இசை ஒன்றி நிற்பதைப் பார்க்கிறேம்: 'வா' என்றசொல்லை ஒலிக்கும்போது இடம் நோக்கி நாம் கையை அசைக்கிறேம்: இயல் இசையோடு ஒன்றி நின்ற 'வா', நாடகத்தோடும் ஒன்றி நிற்பதைக் காண்கிறேம்; இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று தன்மையையும் 'வா' என்ற சொல்லில் இணைந்து நிற்பதை நாம் பார்க்கி பார்க்கிறேம்.

"இலக்கணப் பாகுபாட்டினை உணர்த்த உயிர், மெய், உயிர்மெய், உடன்படும் மெய் என்பனபோன்ற இயற்கைத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு பெயர்களை இட்டதுபோல், மொழிக்கு, அதாவது தமிழ் மொழிக்கு அதன் இயல்புத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு "முத்தமிழ்" என்று பெயரிட்டனர்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மேலும் தொடர்ந்து பேசும் போது, பண்டைத் தமிழகம் எப்படியிருந்தது என்பதைப் பற்றியும், பிற்காலத்தில் அது எப்படித் தாழ்ந்தது என்பது பற்றியும், வருங்காலத் தமிழகத்தை எப்படி உருவாக்கவேண்டும் என்பது பற்றியும் மிக விரிவாக எடுத்துக் கூறினர்.

மேலும் பேசும்போது, தமிழர்கள், பழைமைக்கு வளையாமல்—பணியாமல்—நெளியாமல், பழைமையைப் பார்த்து, அதில் தேவையானவற்றை எடுத்துக்கொண்டு, மற்றதை அகற்றிவிட்டு, வருங்காலத்தை மிகச் சிறப்பாக அமைக்க வேண்டுமென்று பலமேற்கோள்கள் எடுத்துக்காட்டி விளக்கிப் பேசினர்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூற முதல் நாள் விழா மிகச் சிறப்போடு முடிவுற்றது. மழை பெய்தும் கூட்டம் மிகவாக வந்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும். (ந. வி. நி.)

2,25,000 தமிழர்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணையில், குடி உரிமைப் பதிவு அதிகாரி, குடி உரிமை மனுவை நிராகரித்தார் என்று கூறப்படுகிறது.

இலங்கை இந்தியர் நிலையில் ஏற்பட்டிருக்கும் விரும்பத் தகாத இந்த மாறுதலைக் கண்டு இலங்கை ஜனநாயக காங்கிரசார் மனம் நொந்து போயுள்ளார்கள் என்று தெரிகிறது.

இது பற்றி சர்க்கார் அதிகாரி ஒருவர், குடி உரிமை மனுக்களை ஒப்புக்கொள்ள உள்ள இடையூறுகளைப் போக்க சர்க்கார் உத்தரவுகள் பிறப்பித்துவிட்டனர் என்றும், மேற்படி குடி உரிமை மனு நிராகரிப்பு பற்றி அப்பீல் செய்து கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை ஜனநாயகக் காங்கிரசாரும் இது பற்றி அப்பீல் செய்ய இருக்கிருர்கள் என்று தெரிகிறது.

சென்னை திருவள்ளுவர் கழகம்

23—10—54 மாலை 6½ மணிக்கு சென்னை, புரசை பெரியசாலை, அன்னதான சமாஜ மண்டபத்தில், தோழர் வே. த. அர்ச்சுனனுர் 'மெய்யுணர்தல்' என்பது குறித்து பேசுவார்.

ஆளும் பொறுப்பை டில்லி ஆதிக்கம் மேற்கொள்ளும்

கேவல்சிங் கமிஷனராக நியமனம்!

பிரெஞ்சிந்திய அதிகார மாற்ற ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று

புதுடில்லி, அக். 21—பிரெஞ்சிந்தியப் பகுதிகளை, இந்திய அரசாங்கத்திடம் பிரெஞ்சு அரசாங்கம் ஒப்படைக்கும் அதிகார மாற்றத்திற்கான ஒப்பந்தம் இருநாட்டு அரசாங்கங்களாலும் இன்று பகல் 12 மணியளவில் கையெழுத்திடப்பட்டது.

அதன்படி, வருகிற நவம்பர் 1-ந் தேதியன்று, பிரெஞ்சிந்தியத் திட்டுக்கள் இந்திய அரசாங்கத்தின் நேரடியான அதிகாரத்திற்கு மாற்றப்படும்.

இந்த அதிகார மாற்றம், கடந்த 230 ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வந்த பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சியை இந்திய மண்ணிலிருந்து ஒழிக்கிறது.

நவம்பர் 1-ந் தேதியன்று, பிரெஞ்சிந்தியப் பகுதிகள் அத்தனையிலும் இந்திய தேசீயக் கொடி ஏற்றுவிக்கப்படும்.

மேலும் பிரெஞ்சிந்தியாவின் பிரதம கமிஷனராக கேவல் சிங், நிர்வாகப் பொறுப்பை ஏற்பார். அன்றுவரை நிர்வாகப் பொறுப்பை வைத்திருந்த பிரெஞ்சிந்திய கமிஷனர் விலகிக் கொள்வார்.

கழகக் கூட்டங்கள்

★

சிவகங்கை

அரண்மனை வாயில் முன்பு
23—10—54 மாலை 6½ மணிக்கு
தலைவர்: இரா. தியாகராசன்
பேசுவோர்:
டி. கே. தாமரைச்செல்வன்
எஸ். முத்து
கோ. மணவாளன்

★

வாலாஜாபாத்

24—10—54 ஞாயிறு மாலை
தலைவர்: W. K. இரத்தினவேலு
பேசுவோர்:
காஞ்சி கல்யாணசுந்தரம்
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்
எஸ். எஸ். தென்னரசு
மு. புரட்சிமணி

★

செல்வபுரம் (கோவை)

தி. மு. கழக 3-வது ஆண்டு விழா
அழகிரி திடல் பாண்டியன் அரங்கில்
24-10-54 காலை 10 மணிக்கு
தலைவர்: அ. நெடுஞ்சேரன்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
வணங்காமுடி

நன்கொடை அணா 4

★

இலங்கை

தி. மு. கழக கொழும்பு கிளை
6-வது ஆண்டு விழா
மருதானை ஸ்கின்னர்ஸ் ரோடு, தெற்கு அரசினர் பாடசாலை மண்டபத்தில்
நவரெத்தினசாமி அரங்கில்
24—10—54 மாலை 5 மணிக்கு
தலைவர்: என். கதிரவன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
இரா. அதி. மணி
டி. எம். பீர்முகம்மது
எம். ராஜமணி
ஏ. எஸ். மணவைத்தம்பி
பி. தம்பித்துரை

குறள் நெறி விழா

சென்னை, நுங்கம்பாக்கம் அவன்யூச் சாலை எதிர் திடலில், குறள் நெறி விழா 23—10—54 மாலை 5 மணிக்கு, பாராளுமன்ற உறுப்பினர் திருக்குறளார் வீ. முனுசாமி துவக்கி வைப்பார். தோழர் சொ. அமிர்தகணேச (முதலியார்) தலைமையில், தோழர் ரா. பி. சேதுப்(பிள்ளை) மற்றும் பலர் பேசுவர்.

தமிழர் மன்றம் துவக்க விழா

23—10—54 மாலை 5 மணிக்கு திருப்பாலைவனத்தில், மேற்படி மன்றத் துவக்க விழா தோழர் வே. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர் ஏ. நடராசன் மன்றத்தைத் திறந்துவைப்பார். தோழர்கள் கண்ணதாசன், முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 17-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

23—10—54 இரவு 8-30 மணியளவில், சூளை 17-வது வட்ட தி. மு. கழக மனையில் நடைபெறும் செயற் குழு கூட்டத்தில் பொதுக் கூட்ட வரவு-செலவு, பொது உறுப்பினர்கள் குழுவை கூட்ட ஆலோசித்தல், இதர முக்கிய பிரச்சினைகள் பற்றி விவாதிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.